
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1083

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## திராவிட மாடல் அரசு

**நீரை.மகேந்திரன்**

154





# விக்டோரியா பொது அரங்கம்!

## சென்னை கலாச்சார வாழ்வின் அடையாளம்!

**`முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்' என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு நம் முதலமைச்சர் செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி...**

சென்னை பெருநகர மாநகரம், இந்தியாவின் மிக முக்கிய பழைமையான மாநகரம். சென்னப்பட்டணம், சென்னை ராஜதானி, மதராஸ் மாகாணம் என அதன் நெடிய வரலாற்றில் அழியாத பல அடையாளங்கள் இன்றும் நம் கண் முன் உள்ளன. அதில் முக்கிய அடையாளங்களில் ஒன்று, விக்டோரியா பொது அரங்கம்.

சென்னை ரிப்பன் கட்டடம் மற்றும் சென்ட்ரல் ரயில் நிலையத்தின் மையத்தில், பூந்தமல்லி நெடுஞ்சாலையில் இந்த அரங்கம் அமைந்துள்ளது.

இந்தோ சாரசெனிக் பாணியில் கட்டப்பட்ட இந்த அரங்கத்தின் வயது, சுமார் 130 ஆண்டுகளுக்கும் மேலாகிறது. அந்தக் கட்டடக்கலைக்கு அழியாத ஓர் எடுத்துக் காட்டாக உள்ளது. 25,883 சதுர அடி பரப்பள வில், கடந்த 1886 ஆம் ஆண்டு கட்டடம் கட்டும் பணி தொடங்கப்பட்டு, 1890 ஆம் ஆண்டு முழுமையடைந்துள்ளது.

ராபர்ட் சிசோமால் (1840-1915) என்கிற ஆங்கிலேயரால் வடிவமைக்கப்பட்டு, நம்பெரு மாள் என்பவரால் கட்டி முடிக்கப்பட்டது. 1887 ஆம் ஆண்டு, கன்னிமாரா பிரபுவால் திறக்கப்பட்டுள்ளது. வேறொரு தரவின்படி 1886-1890 ஆம் ஆண்டுகளில், சென்னை மாகாண கவர்னராக இருந்த சர் மவுண்ட்ஸ்டு வர்ட் எல்பின்ஸ்டோன் கிராண்ட் டஃப் ஆல் இந்த அரங்கத்தைத் திறந்துவைத்தார் என்றும் சொல்லப்படுகிறது. அக்கால சென்னை மாநகராட்சித் தலைவரான ஏ. டி. அருண்டேலின் முன்முயற்சியின்பேரில், 1888 ஜனவரியில் நடந்த நகர மக்கள் கூட்டத்தில், இந்தக் கட்டடத்துக்கு விக்டோரியா மகாராணியின் பெயரைச் சூட்ட தீர்மானம் போடப்பட்டுள்ளது.

### தென்னிந்திய நல உரிமைச் சங்கம் உருவாக்கம்

அந்தக் காலத்தில் சென்னையில் மிக முக்கியமான அரசியல் கலாச்சார மையமாக இந்த அரங்கம் திகழ்ந்துள்ளது. குறிப்பாக, சென்னையின் முதல் மாலை நேர நாடக நிகழ்ச்சிகள் இங்கு நடத்தப்பட்டுள்ளன. பொதுமக்கள் அனுமதிக்கப்பட்ட முக்கிய இடமாக இது திகழ்ந்துள்ளது.

சுதந்திரப் போராட்ட காலகட்டத்தில், தேசியத் தலைவர்கள் பலரும் இந்த அரங்கில் கூட்டங்களை நடத்தியுள்ளனர். நாடக முன்னோடிகளான சங்கரதாஸ் சுவாமிகள், பம்மல் சம்பந்தம் போன்ற தமிழ் நாடக



முன்னோடிகள் தங்களது நாடகங்களை இங்கு நடத்தி உள்ளனர்.

இருபதாம் நூற்றாண்டில், தமிழ்நாட்டில் சமூக நீதி அரசியலின் தொடக்கமாக அமைந்த தென்னிந்திய நல உரிமைச் சங்கம், 1916 ஆம் ஆண்டு இங்குதான் தோற்றுவிக்கப்பட்டு, பிராமணர் அல்லாதாருக்கான முதல் மாநாடு நடைபெற்றுள்ளது. நீதிக்கட்சி மாநாடுகள், திராவிடர் இயக்கம், தி.மு.க. மாநாடுகள் எனப் பல அரசியல் நிகழ்ச்சிகள் இங்கு நடைபெற்ற வரலாற்றுச் சிறப்பு கொண்டது.

இப்படி சென்னையின் சமூக, பண்பாட்டு வரலாற்றின் முக்கிய சாட்சியாக விளங்கும் இந்த அரங்கத்தை 32.62 கோடி மதிப்பீட்டில் தொன்மை மாறாமல் புனரமைத்து, 23.12.2025 அன்று திறந்துவைத்தார், நம் முதலமைச்சர் அவர்கள்.

அரங்கத்தின் பழைமை, கலைநயம் மற்றும் வரலாற்றுத்தன்மை பாதிக்கப்படாமல், அதே நேரத்தில் நவீன வசதிகளுடன் புனரமைக்கப் பட்டுள்ளது. குறிப்பாக, பழைமையான செங்கல் வேலைப்பாடுகள், கைவினை நுணுக்கம் கொண்ட மரத்தூண்கள், மேற்கூரைகள் மற்றும் சுவர்களின் வடிவமைப்பு ஆகியவை தொல்லியல் நிபுணர்கள் மற்றும் கட்டடக் கலை வல்லுநர்களின் மேற்பார்வையில் சீரமைக்கப்பட்டுள்ளன.

> **சென்னையின் சமூக, பண்பாட்டு வரலாற்றின் முக்கிய சாட்சியாக விளங்கும் இந்த அரங்கத்தை 32.62 கோடி மதிப்பீட்டில் தொன்மை மாறாமல் புனரமைத்து, 23.12.2025 அன்று திறந்துவைத்தார், நம் முதலமைச்சர்!**

பொது அரங்கத்தின் தரைதளத்தில் அமைக்கப்பட்டுள்ள கண்காட்சியில், அரங்கம் கட்டுவதற்கு உதவிய ஆதரவாளர்கள், கட்டடக் கலைஞர்கள், இங்கு உரையாற்றிய தலைவர்கள், நீதிக்கட்சியின் எழுச்சி, நாடகமும் சினிமாவும், விளையாட்டுகளின் வரலாறு ஆகியவற்றை விரிவாகப் பதிவுசெய்யும் கண்காட்சி அமைக்கப்பட்டுள்ளது. வெளிப்புறப் பகுதியில் டிராம் வண்டி, தொல்லியல் காட்சிப் பகுதி ஆகியவையும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. பக்கிங்காம் கால்வாயில் படகு, பழைய ஸ்கூட்டர், ரிக்ஷா போன்ற நினைவூட்டும் செல்ஃபி பாயின்ட்டுகளும் அமைக்கப்பட்டுள்ளன.

### பார்வையாளர்கள் அனுமதி

விக்டோரியா பொது அரங்க அருங்காட்சியகத்தை, முன்பதிவின் அடிப்படையில் பொதுமக்கள் பார்வையிடலாம். அருங்காட்சியகத்தைப் பார்வையிட எவ்வித கட்டணமும் இல்லை. ஆனால், இணையதளத்தில் முன்பதிவு செய்தவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள். சென்னை மாநகராட்சியின் அதிகாரபூர்வ இணையதளமான CHENNAICORPORATION.GOV.IN/GCC மூலம் VICTORIA PUBLIC HALL என்பதைத் தேர்வுசெய்து, முன்பதிவு செய்ய வேண்டும்.





காலை 8.30 மணி முதல் மாலை 6.30 மணி வரை பார்வையிடலாம். ஒவ்வோர் ஒன்றரை மணி நேர இடைவெளிக்கும் அதிகபட்சமாக 60 பேர் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.

### நிகழ்ச்சிகளுக்கு அனுமதி

விக்டோரியா பொது அரங்கின் கலை அரங்கமும் பொதுமக்கள் பயன்பாட்டிற்காகத் திறக்கப்பட்டுள்ளது. இதற்கும் ஆன்லைன் மூலம் முன்பதிவு செய்ய வேண்டும். கலை, இலக்கியம் மற்றும் பொதுவான நிகழ்ச்சிகளுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படும். பதிவுசெய்த பிறகு, நிகழ்ச்சியின் நோக்கத்தைப் பொறுத்து அனுமதி உறுதிசெய்யப்படும்.

1967 ஆம் ஆண்டில் பேரறிஞர் அண்ணா முதலமைச்சரான பொழுது, இந்த அரங்கத்தைப் புனரமைத்து வரலாற்றை மீட்டார். இன்று, நூற்றாண்டு வரலாற்றை இளைய தலைமுறைக்குக் கொண்டுசெல்லும் வகையில் விக்டோரியா பொது அரங்கத்திற்கு உயிர் கொடுத்துள்ளார் நம் முதலமைச்சர்.

### சென்னையின் வரலாற்றில்...

இந்த அரங்கம் என்பது கட்டடம் மட்டுமல்ல; வரலாற்று நினைவுகளின் உயிர்ப்பான சின்னம். பல ஆண்டுகள் காத்திருப்புக்குப் பிறகு, இன்று மீண்டும் உயிர் பெற்று இசை, கலை, பேச்சு மற்றும் சமூக நிகழ்ச்சிகளின் மையமாக மாறி உள்ளது. திராவிட மாடல் அரசால், சென்னையின் கலாச்சார வாழ்வில் ஒரு புதிய அத்தியாயம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

**...சாதனை தொடரும்**



## சுயமரியாதை இயக்கத்தின் 100 ஆண்டுகள், 100 புத்தகங்கள்!

நீதிக்கட்சி தொடங்கி இந்த நாள்வரை, திராவிட இயக்கத்தின் முக்கிய காலப்பதிவுகளை ஆவணப்படுத்தும் 100 புத்தகங்களை வெளியிட்டுள்ளது ஆழி பதிப்பகம்.

இதுகுறித்து ஆழி செந்தில்நாதன் எழுதியுள்ள குறிப்பில், 1916-இல் வெளியிடப்பட்டு, நமது தமிழ்நாட்டின் திசைவழியையே மாற்றிய, பார்ப்பனரல்லாதோர் அறிக்கை (NON-BRAHMIN MANIFESTO) தொடங்கி, கலைஞர், பேராசிரியர் ஆகியோரின் நூல்கள் உள்பட, திராவிட இயக்க ஆளுமைகளின் 100 நூல்கள் இந்த வரிசையை அழகு செய்கின்றன.

அறிஞர் அண்ணாவின் 'தீ பரவட்டும்', 'பணத்தோட்டம்' உள்ளிட்ட சுமார் 40 நூல்கள், கலைஞரின் 'நெஞ்சுக்கு நீதி' 6 தொகுதிகள், 'குறளோவியம்', 'சங்கத் தமிழ்', 'தொல்காப்பியப் பூங்கா', 'திருக்குறள் உரை', 'பராசக்தி' கதை வசனம் ஆகியவை, பாவேந்தர் பாரதிதாசன், ஏ.எஸ்.வேணு, பேராசிரியர் க.அன்பழகன், நாவலர் நெடுஞ்செழியன், ஏ.வி.பி. ஆசைத்தம்பி, சி.பி. சிற்றரசு, புலவர் கோவிந்தன். மூவலூர் ராமாமிருதம் அம்மையார், கவிஞர் முடியரசன், மா இளஞ்செழியன், சாமி சிதம்பரனார், புலவர் குழந்தை உள்ளிட்ட பலரின் முக்கிய படைப்புகள் இதில் இடம்பெற்றுள்ளன.

நீதிக்கட்சித் தலைவர்கள், சுயமரியாதை இயக்கத் தலைவர்கள், திராவிடர் கழக அறிஞர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர்கள், எழுத்தாளர்கள் எனப் பலருடைய நூல்கள் இதில் இடம்பெற்றுள்ளன.

திராவிட நூலகம் வரிசை உள்பட, ஆழியின் நூல்கள் சென்னை புத்தகக் காட்சியில் அரங்கு எண் 595-596-இல் கிடைக்கின்றன. 'நூல்வரிசையை மொத்தமாக வாங்கினால், தமிழ்நாடெங்கும் வீடுகளுக்கே எங்கள் செலவில் டெலிவரி செய்துவிடுகிறோம்' என்றும் அந்தப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

## ப்ளாஷ்பேக்



ஆர்.டி.முத்து கிருஷ்ணன்



### பிறந்தநாள் வாழ்த்தும் ஊக்கப் பரிசும்!

2015 ஆம் ஆண்டு, எனது பிறந்தநாளை முன்னிட்டு அன்றையப் பொருளாளர் இன்றைய கழகத் தலைவர் அவர்களிடம் வாழ்த்துப் பெற சென்றிருந்தேன். பிறந்தநாளா..? எனக் கேட்டு, ஆயிரம் ரூபாய் ஊக்கப் பரிசு அளித்து வாழ்த்தினார். மறக்க முடியாத பிறந்தநாள் வாழ்த்து!

**- ஆர்.டி.முத்துகிருஷ்ணன், திருவல்லிக்கேணி அமைப்புசாரா ஓட்டுநர் அணி மாவட்ட துணைச் செயலாளர், சென்னை மேற்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### சுற்றுலாவுக்குச் செல்லும் உற்சாகம்!

1937 ஆம் ஆண்டு, இந்தி எதிர்ப்புப் போராட்டக் களத்தில் 1200 பேர் கைது செய்யப்பட்டனர். சிறைக்குச் செல்வது குறித்து பேரறிஞர் அண்ணாவிடம் கேட்டபோது, 'குற்றாலத்துக்கோ, கொடைக்கானலுக்கோ செல்பவர்கள், அங்கே தனக்கு வேண்டியவர்கள் இருப்பதைக் கண்டால் எவ்வளவு மகிழ்ச்சி அடைவார்கள்? எனக்கு அத்தகைய மகிழ்ச்சி ஏற்பட்டது. பெரியாருடன் ஒன்றாக இருக்க, பேச, கேட்க, பழக அருமையான வாய்ப்பு' என்று மகிழ்ந்து கூறி இருக்கிறார்.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.